# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 25 செவ்வாய்க்கிழமை (12-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 274


## இலங்கையர் உட்பட 70 குடியேறிகள் மத்தியதரைக் கடலில் கப்பலில் கைது!

லண்டன், ஒக். 12

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோத குடியேற்ற வாசிகளை ஏற்றிக்கொண்டு ஐரோப்பாவினுள் நுழைய இருந்த கப்பல் ஒன்றை மத்தியதரைக் கடல் தீவான மால்ராவுக்கு அருகே வைத்து அத்தீவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். அதில் இருந்த 70பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கப்பலில் பொருள்கள் வைக்கும் களஞ்சியப் பகுதியில் இவர்கள் அனைவரும் பதுங்கி இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக வடக்கு மற்றும் மேற்கு ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்களே இந்த மார்க்கத்தை பயன்படுத்தி ஐரோப்பிய நாடுகளுக்குள் செல்வது வழக்கம் என்றும்— தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த குடியேற்ற வாசிகள் இப்பகுதியில் கைது செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் முறை என்று மால்ரா உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட அனைவரும் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-4)

## மட்டு. நகரில் தீவிர தேடுதல்!

### 600 பேர் விசாரணை

மட்டக்களப்பு, ஒக். 12

மட்டக்களப்பு நகரில் ரயில் நிலையச் சந்திப் பகுதி நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் படையினரால் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிக்கு உணவு வாகன அணி செல்வது மழையால் இடை நிறுத்தம்

## இடம்பெயர்ந்த மக்கள் அவதி

வவுனியா, ஒக்ரோபர் 12

வன்னிப் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பதை அடுத்து, இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு உணவு வாகன அணி செல்வது இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

கனகராயன்குளம் பகுதியில் பாலம் ஒன்று சேதமடைந்ததைத் தொடர்ந்து கண்டி வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது.

கனகராயன்குளம் பகுதியிலும் மாங்குளம் முன்னரங்க நிலைப் பகுதியிலும் வீதித் திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டி இருப்பதால், கண்டி வீதி ஊடான போக்குவரத்தை இடைநிறுத்துமாறு படையினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளுக்கு அறிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

நேற்று வவுனியாவில் இருந்து உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற 20 லொறிகள் கனகராயன்குளம் பகுதியில் வீதியை மேவி வெள்ளம் பெருக்கெடுத்துப்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## முன்னாள் எம். பி. ராமமூர்த்தி நீர்கொழும்பு வீட்டில் கைது!

### ஆயுதங்களும் பொலீஸாரால் மீட்பு

கொழும்பு, ஒக். 12

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ராமமூர்த்தி நேற்று அதிகாலை நீர்கொழும்பில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து வீட்டைச் சோதனையிட்ட பொலீஸார் அவரைக் கைதுசெய்தனர். அந்த வீட்டில் இருந்து ரீ 56 – 1 ரகத் துப்பாக்கி, பிறவுணிங் ரிவோல்வர், பிஸ்டல் ஆகியன கைப்பற்றப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

ராமமூர்த்தியும் அவரது உதவியாளரான சத்தியசீலன் என்பவரும் விசாரணைக்காக முல்லேரியா பொலீஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஈ. பி. டி. பி. சார்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த காலத்தில் தமது பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட ஆயுதங்களே வீட்டில் இருந்ததாக ராமமூர்த்தியின் சகோதரரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர். ராமேஸ்வரன் தெரிவித்தார்.

(ஐ-7-21)

## கொழும்பில் இருந்து காத்தான்குடிக்கு வந்த பஸ்ஸில் சக்திமிக்க குண்டு

மட்டக்களப்பு, ஒக். 12

காத்தான்குடிக்கும் கொழும்புக்கும் இடையே சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் நேரங்குறித்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றை பொலீஸார் நேற்றுக் கண்டுபிடித்தனர்.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து புறப்பட்ட இந்த சொகுசு பஸ்ஸில் நேற்றுக் காலை 9.45 மணிக்கு வெடிக்கக்கூடியதாக நேரங் கணித்து இக் குண்டு வைக்கப்பட்டிருந்தது.

அந்த பஸ் காத்தான்குடி பஸ்நிலையத்தை அடைந்து பயணிகள் அனைவரும் அங்கு இறங்கிய பின்னர் பார்சல் ஒன்று அநாதரவாகக் கிடந்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## கைவிடப்பட்ட மின்கோபுரங்கள் வவுனியாவில் நேற்று தகர்ப்பு

வவுனியா, ஒக். 12

வவுனியா மாவட்டம் – மதகுவைத்தகுளம் பகுதியில் அமைந்திருந்த இரண்டு மின்கோபுரங்கள் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

தகர்க்கப்பட்ட இரண்டு மின்கோபுரங்களும் பயன்பாடின்றிக் கைவிடப்பட்டிருந்தவை என்றும்= இதனால் வவுனியா நகரப்பகுதிக்கான மின் விநியோகத்தில் எந்தவிதமான தடங்கலும் ஏற்படவில்லை என்றும்—வவுனியாப் பொலீஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து வவுனியா நகரப்பகுதியில் நேற்றுக்காலை பதற்றம் நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-164)

## எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்க விசேட திட்டம் விரைவில் அமுலுக்கு

### பொதுமக்களின் கேள்விக்கு ஜனாதிபதி பதில்

கொழும்பு, ஒக். 12

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கும் கிராமங்களுக்குப் பாதுகாப்பு வழங்க விசேட திட்டம் ஒன்றை அரசு நடைமுறைப் படுத்த உள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் இது விடயத்தில் தான் முக்கிய கவனம் செலுத்தி உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

செய்மதி ஊடாக பொது மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நிகழ்ச்சியில் ஜனாதிபதி இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

மொனராகல பகுதி மக்கள் கேட்ட கேள்விகளுக்கு அலரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். நகரில் ஆரியகுளம் சந்திக்குச் சமீபமாக நேற்று மாலை 7.00 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் இடம்பெற்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றில் இருந்து எலும்புகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 12

ஊர்காவற்றுறை புளியங்கூடல் தெற்குப் பகுதியிலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து ஊர்காவற்றுறை நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் முன்னிலையில் மனித எலும்புத் துண்டுகளும் அதனுடனிருந்த ஆண்கள் அணியும் சேர்ட் ஒன்றும் மீட்கப்பட்டன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு குண்டுத் தாக்குதல்: பாதிக்கப்பட்டோருக்கு 15லட்சம் ரூபா நஷ்டஈடு

வவுனியா, ஒக். 12

புதுக்குடியிருப்புப் பகுதியில் கடந்த மாதம் நடத்தப்பட்ட கிபிர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவென வடபகுதி மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபை 15லட்சம் ரூபாவை முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் திருமணமான ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் திருமணமாகாதவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் சிறுவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும் வழங்குமாறு அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மாலைதீவு பயணம்

கொழும்பு, ஒக். 12

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலைதீவு பய

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## முதியோர், சிறுவர் தினம்

வலி- கிழக்கு ஒக். 12 நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச முதியோர்தின விழாவும் சிறுவர் தின விழாவும் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன் கிழமை நல்லூர் பிரதேச செயல மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட முதியோர்கள் இவ் விழாவில் கௌரவிக்கப்பட உள்ளனர். (ஐ-180)

## கண்ணீர் அஞ்சலி

அரச உத்தியோகத்தர் என்ற வரையறைக்குள்
மட்டும் நின்று கடமை புரியாது
மனிதாபிமானரீதியில் எமது கிராமத்துக்கு
அளப்பரிய சேவையாற்றும்
பணிப்புலம் கிராம உத்தியோகத்தர்

**திரு. சி. ஜீவராஜா** அவர்களின்
அன்புத் தந்தையார்


**இராமலிங்கம் சீவரத்தினம்**

அவர்களின் மறைவு குறித்து எமது
கண்ணீர் அஞ்சலிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

பணிப்புலம் வாழ் பொதுமக்கள் சார்பில்
சு. சிவநேசராசன்

(69881)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 — 01 — 1934

மறைவு 12 — 10 — 1997

அமரர்

**P. K. பாலசிங்கம்**

(படியாதவன்)

(இளைப்பாறிய முதன்மை ஆசிரியர்,
ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்)
பாடவிதான அபிவிருத்தி நிலையம், கொழும்பு
கல்வி அமைச்சின் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர்)

அப்பா!
நீங்கள் உள்ளபோது எமக்கு இல்லாதது ஒன்றுமில்லை
நீங்கள் இல்லாத போது எமக்கு ஒன்றுமேயில்லை!

மனைவி, மக்கள், மருமகள், பேரன்,
சகோதர சகோதரிகள். மருமக்கள்.

P. K. B. பாலஸங்கர்
''விதானை சங்கரியாவளவு''
718, கே. கே. எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

(சி/9309)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 24 — 04 — 1945

மறைவு 12 — 09 — 1999

**திருமதி பரமேஸ்வரி கார்த்திகேசு**

(தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி, தெல்லிப்பழை)

கண்ணை இமை காப்பது போல்
எங்களைக் காத்த எமதன்புத் தாயே!
கலங்கி நிற்கின்றோம்! எமக்கு ஆறுதல் யாரம்மா?

கணவன், மகள்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(69886)

## நாய்களுக்கு தடுப்பு மருந்து

சங்கானை, ஒக். 12

பொது சுகாதாரப் பரிசோதகர்களால் வலிகாமம் மேற்குப் பிரிவில் நாளை புதன் கிழமை வளர்ப்பு நாய்களுக்கு நோய்த்தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ள இடங்கள், நேரங்கள் வருமாறு:

★ சங்கானை நிகரை வைரவர் ஆலயம்— 8.30 மணி முதல் 10.00 மணி வரை.

★ தொட்டிலடி — 10.30 மணி முதல் 11.30 மணி வரை.

★ நிற்சாமம்— 12.30 மணி முதல் 2.00 மணி வஎ.ர.

★ பணிப்புலம்— 2.30மணி முதல் 3.30 மணி வரை.

(க-29)

★ ★ ★

மானிப்பாய் சுகாதாரப் பகுதியினரால் சுழிபுரம் பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் வியாழக்கிழமை நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

சுழிபுரம் மேற்கு பெரிய தம்பிரான் சனசமூக நிலையம், பெரியபுலோ ச.ச.நிலையம் மூட்டடி ஆகிய நிலையங்களில் இந்தத் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

(க-28)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**பட்டமளிப்புவிழா 1999**

பட்டமளிப்பு விழாவில் புகைப்படங்கள் எடுத்துக் கொண்ட மாணவர்கள் 1999-10-12 ஆம் திகதியிலிருந்து தமது புகைப்படங்களை கல்விக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்

(சி/9308)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய் -சங்கவி-சுவாதி
ரகுவரன்
நடித்த
**செல்வா**
காட்சிகள்:
11-00, 2-30.
(புதிய நேரம்)
(69834)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று முதல்
சிவாஜி – அஜய் –மாளவிகா
நடித்த
பூப்பறிக்க
வருகிறோம்
காட்சிகள்: 10-30, 2–30
T.P.No. 070-212223
(69659)

**ராஜா**
யாழ்ப்பாணம்
அர்ஜுன் – குஷ்பு
மற்றும் பலர் நடித்த
**ரோஜாவைக் கிள்ளாதே**
10-30, 2–30
(சி/9165)


## மரண அறிவித்தல்கள்

### தியாகராஜா நிற்சிங்கம்

(முன்னாள் பிரதம எழுதுவினைஞர்,
விற்பனைத் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம்)

கைதடி தெற்கைச் சேர்ந்த தியாகராஜா நிற்சிங்கம் அவர்கள் நேற்று 11 - 10 - 99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னப்பா தியாகராஜா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மானார்சந்திரசேகரர் – விசாலாட்சி தம்பதிகளின் மூத்த மருமகனும் ரதிதேவியின் அன்புக் கணவரும் யோகேந்திரா (வர்த்தகத் திணைக்களம், யாழ்ப்பாணம்), பாலேந்திரன் (வவுனியா), பத்மினி (ஆசிரியை, யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்), மகேந்திரன் (வவுனியா), சிவசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-10-99) செவ்வாய்க்கிழமை பகல்12.00மணியளவில்அன்னாரின் இல்லத்தில் (மணியகாரன் வளவு, கைதடி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊத்தல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்

மணியகாரன் வளவு,
கைதடி.

(69883)

### திருமதி ஆறுமுகசாமி பங்கஜசெல்வம்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி ஆறுமுகசாமி பங்கஜசெல்வம் அவர்கள் நேற்று 11 - 10 - 99 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகசாமியின் (யாழ். ஸ்ரான்லி வீதி, கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற ராசா (முள்ளியடி), அழகம்மா தம்பதிகளின் ஏக புதல்வியும் பாலசுப்பிரமணியம் (ராசா), விக்னேஸ்வரன் (சுவிஸ்), வரதராஜன் (சுவிஸ்), தனவதி, தவராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் செந்தில்வேல், தங்கக்கண்டு, கணபதிப்பிள்ளை, ராசமணி, சக்திவேல் (சின்னத்துரை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 173, வாசல வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து இன்று பிற்பகல் 3. 00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு 5.00 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலசுப்பிரமணியம்
(மகன்)

T. V. S. P. & என்ரபிறைஸ்,
173, வாசல வீதி
கொட்டாஞ்சேனை,
கொழும்பு-13
தொலைபேசி இல: 074-615609

(சி/9313)

### திருமதி பூரணம் கந்தையா

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் கந்தையா அவர்கள் 10-10-99 இல் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் சர்வேஸ்வரியின் அன்புத்தாயாரும் பாக்கியலிங்கம் (சட்டத்தரணி - கொழும்பு) அவர்களின் மாமியாரும் உமா, றஜீவ், சுஜீவ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 11-10-99 திங்கட்கிழமை நண்பகல் 1. 00 மணியளவில் றேமன்த் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. கதிர்காமநாதன்
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

Mr. K. Packiyalingam,
At. At. Law,
258/4 Dam Street,
Hulftsdorp,
Colom bo - 12,
T. P. No. 334959.

(சி/9311)

### நீக்கிலாப்பிள்ளை அந்தோனிமுத்து

(செல்லத்துரை)

கரவெட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் நீக்கிலாப்பிள்ளை அந்தோனிமுத்து (செல்லத்துரை) 11-10-99 திங்கள் மாலை இறைவனடி சேர்ந்துள்ளார். இவர் வரோணிக்காவின் அன்புக் கணவரும் மரியதாஸ் மனோகரனின் நேசத் தந்தையும் மேரி எம்மாவின் மாமனாரும் மரியகோபினி, ஜேம்ஸ்கரன், எசாந்தியா, றூவின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12 - 10 - 99 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் இறுதி ஆராதனைகளின் பின் கிரிப்பல்லி கல்லறைத் தோட்டத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அ. ம. மனோகரன்
(முன்னாள் பொலீஸ் அலுவலர்)
(மகன்)

கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

(69882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு

### வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு
### இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் வகுப்பு II 'ஆ' பதவிக்கு
### ஆட்சேர்ப்பு செய்வதற்கான

# திறந்த போட்டிப் பரீட்சை - 1999

1. வடக்கு — கிழக்கு மாகாண பொதுச் சேவையின் விவசாயத் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆள் சேர்ப்பு செய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையை உடைய ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 1999 - 10 - 29 ஆகும்.

2. இப்பதவிக்குரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை அண்ணளவாக 25 ஆகும். இவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்கூறப்பட்டவாறு இருந்தபோதிலும் சேவையின் தேவையைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவதற்கோ அல்லது கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

3. சம்பள அளவுத்திட்டம்:
ரூபா. 51, 840—7 × 1,320 — 10 × 1,560—76,680/- (T-3-1-1)

4. தகைமைகள்:

4:1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4:2 சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

4:3 விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில், மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

4:4 வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னுள்ள 6 ஆண்டு காலப்பகுதியில் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளாவது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

பின்வரும் ஆவணங்கள் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது இவற்றை நிரூபித்தல் வேண்டும்.
1. வாக்காளர் இடாப்பின் பிரதி
2. வதிவு தொடர்பான கிராமசேவை உத்தியோகத்தரிடம் பெற்ற சான்றிதழ்

குறிப்பு:

வடக்கு - கிழக்கு மாகாணத்தினை நிரந்தர பிறப்பிடமாகவோ அல்லது வதிவிடமாகவோ கொண்டிருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களில் தற்காலிகமாக வசிப்போரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமாகக் காட்டி வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. இதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம் பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4:5 தொழில்நுட்ப தகைமைகள்:
கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஒன்றையாவது விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

4:5:1 குண்டசாலை, அங்குணகொலபொலச. பெல்வெகார, வவுனியா, கரபிஞ்ச, லபுதுவ, அனுராதபுரம், விபிலெ. வாரியப்பொல ஆகிய விவசாயக் கல்லூரி ஒன்றினால் வழங்கப்பட்ட இருவருட டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4:5:2 உயர்கல்வி அமைச்சின் தொழில் நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் விவசாய டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

4:5:3 மேற்கூறிய தொழில்நுட்பத் தகைமைக்குச் சமமானது அல்லது உயர்வானது என வடக்கு—கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய ஒரு தகைமையைப் பெற்றிருத்தல்.

5. ஆள்சேர்ப்பு முறை:
எழுத்துப்பரீட்சைப் பெறுபேற்றின் திறமை அடிப்படையிலும் அரசாங்க தாபனக்கோவை விதிகள், அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்புத் திட்டம், அரச சுற்றுநிருபங்கள் ஆகியவற்றுக்கு இணங்க ஆள்சேர்ப்புச் செய்யப்படும்.

6. எழுத்துப் பரீட்சை:
இந்த எழுத்துப் பரீட்சையானது தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். எழுத்துப் பரீட்சை பின்வரும் இரு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு பாடங்களிலும் 35% புள்ளிகளையோ அதற்கு மேலான புள்ளிகளையோ பெற்றிருத்தல் வேண்டும்.

1. உளச்சார்பு —1 மணித்தியாலம்
2. பொது அறிவு (விவசாயம் சம்பந்தமான விடயங்கள் அடங்கலாக) —2 மணித்தியாலம்

நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் பரிசீலிக்கப்படும். இதன்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

7. பரீட்சைக் கட்டணம்:
விண்ணப்பதாரி வதியும் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200 செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் கழராதவாறு ஒட்டி இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் 6004 இலக்க வைப்புக் கணக்கில் வரவில் சேரக்கூடியதாகப் பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்கு தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 200 இற்கான காசுக்கட்டளையை செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு என்ற பெயருக்குப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

8. விண்ணப்பிக்கும் முறை
இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி ஏ4 அளவிலான (21 செ.மீ. X 29 செ.மீ.) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பத்தை ஒழுங்கு செய்து கொள்ளல் வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 10 வரையுள்ள பகுதியை அதன் முதற்பக்கத்திலும் எஞ்சிய பகுதியை இரண்டாம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் ஒழுங்கு செய்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 1999-10-29 ஆந் திகதிக்கு முன் 'செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு—கிழக்கு மாகாணம், இல. 35, மக்கேய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வடக்கு—கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் விவசாய போதனாசிரியர் வகுப்பு11 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை 1999 என பரீட்சையின் பெயரைக் குறிப்பிடப்படுதல் வேண்டும் (மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.) பூரணமற்றதும், உரிய தகைமைகளைக் கொண்டிராததும், குறித்த திகதிக்கு முன் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது நிரந்தர நியமனத்தைப் பெற்ற பின்போ எக்கட்டத்திலும் அவரின் நியமனம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரி ஒருவர் அளித்த விவரங்கள், சான்றிதழ்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனும் முக்கிய விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் தெரிவிலிருந்து அல்லது சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

9. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்கள் பின்வருமாறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | — 10 | வவுனியா | — 13 | அம்பாறை | — 16 |
| மன்னார் | — 11 | திருகோணமலை | — 14 | கிளிநொச்சி | — 25 |
| முல்லைத்தீவு | — 12 | மட்டக்களப்பு | — 15 | கல்முனை | — 26 |

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகரம் அண்மையான நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இந்த அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத/குறிப்பிடப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பாகவும், தரப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவு நியமனங்கள் தொடர்பாகவும் வடக்கு—கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினாலேயே இறுதியானதும் முடிவானதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

**க. பரமேஸ்வரன்**
செயலாளர்,
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு - கிழக்கு மாகாணம்,**
**திருகோணமலை.**

(மாதிரி விண்ணப்பப் படிவம் 4 ஆம் பக்கத்தில்)

## வெள்ளிவிழாக் கலை நிகழ்ச்சி

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் மு. கோபாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

யாழ். பல்கலைக்கழக நடனத்துறையினர் வழங்கும் 'கற்பகவல்லி', 'பாவரஸாநந்தம்', 'தில்லானா' ஆகிய நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ-க)

## சாத்தியம் இல்லை

"இராஜ வீதி ஊடாக பஸ் சேவை நடத்தப்படாததுக்குக் காரணம் படையினரின் அனுமதி கிடைக்கப்பெறாமையே என்று கோண்டாவிலில் அமைந்துள்ள பஸ் டிப்போ பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் இருந்து இராஜ வீதி ஊடாக அச்சுவேலிக்கு பஸ் சேவை ஒன்றை நடத்துமாறு அப்பிரதேச மக்கள் கோரியிருந்தமை தெரிந்ததே.

## வீட்டுத் தோட்டத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 12
யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யுனிசெவ் மற்றும் பட்டினிக்கெதிரான நிறுவனம் ஆகியவை இணைந்து வீட்டுத் தோட்டத்திட்டம் ஒன்றினை நடைமுறைப் படுத்த உள்ளன.

இந்தத் திட்டத்துக்கென வண்ணார்பண்ணை, கந்தர்மடம், நல்லூர், அரியாலை, கொழும்புத்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த 375 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பயிற்சிகள் யாவும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களால் விரைவில் வழங்கப்பட உள்ளன. [இ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி கிடைத்தோரின் (செப்ரெம்பர் 3 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலகரீதியாக வருமாறு:

(சாவகச்சேரி தொடர்ச்சி)

[114564ஏ), [114564பி[,
[114565ஏ], [114565பி].
(114567ஏ], [114569ஏ],
[114570ஏ], [114572ஏ],
[114572பி], (114573ஏ),
[114573பி], (114573சி[,
(115474ஏ]. (114574பி].
[114575ஏ], (114575பி),
(114579ஏ), (114579பி),
(115074ஏ), (115584ஏ].
[115584பி[, [115585ஏ]),
[115588ஏ]. (115590ஏ),
[115592ஏ], (115595ஏ),
(115595பி)' ]115598ஏ],

(115598பி), (115598சி;,
(115603ஏ[, (115613ஏ),
(115614ஏ), [115619ஏ],
(115619பி),
(115621ஏ), [115623ஏ],
[115623பி], /115623சி)'
[115625ஏ], (115627ஏ),
[115627பி), (115633ஏ],
(115633பி). [115634ஏ],
(115634பி). [115634சி],
([115635ஏ], [115642ஏ],
115642பி). (115646ஏ).
[115646பி], [125654ஏ[,
[115654பி], [115657ஏ],
[115684ஏ]. [115684பி],

[115690ஏ], ]094691ஏ],
[104964ஏ], [104964பி],
[104970ஏ], [104998ஏ],
[105018ஏ], [105018பி].
[107680ஏ], [107688ஏ],
[107688பி], [107806ஏ],
[107815ஏ], [107815பி],
[107821ஏ], ]107821பி],
[107825ஏ], [107825பி]
[107835ஏ], [107840ஏ],
[107852ஏ], [112206ஏ],
[112206பி],
[112210ஏ], [112210பி],
[112210சி], [112210டி],
[112211ஏ], [112211பி],

[112211சி], [112211டி]
[112211ஈ], ]112228டி]
[112228ஈ[ [112228எவ்]
]112230ஏ[, [112238ஏ]
[112238பி[.
[112241ஏ], ]112241பி],
]112242ஏ[, ]112242பி],
[114282ஏ], [114284ஏ],
[114284சி[. [114284டி],
[114299ஏ[, [114299பி],
[114302ஏ], [114302பி],
[114302சி[, [114302டி],
[114302ஈ[, [114302எவ்],
[114302ஜி], [114302ஏச்],
[114307ஏ], [114307பி],
[114307சி[, [114307டி],
[114307ஈ], [114317ஏ],
[114317பி]. (114284பி).
(114320ஏ], (114320பி),
(114331ஏ], (114331பி),
(114333ஏ), (114337ஏ),
(114337பி), (114348ஏ),
(114349ஏ), (114349பி),
(114349சி), (114349டி),
(116441ஏ).

நெடுந்தீவு

[11708ஏ], [11708பி],
[11732ஏ], [11808ஏ],
[11833ஏ], [11833பி],
[11885ஏ], [11885பி],
[11885சி], [11886ஏ[,
[11903ஏ].

யாழ்ப்பாணம்

[109942ஏ], [110358ஏ],
[117497ஏ], [075900ஏ],
[093920ஏ], [093920பி],
[098725ஏ), [098725பி],
[098725சி], [098725டி],
(100344ஏ), (100344பி),
(102462ஏ), (107409ஏ),
(109112ஏ), (109112பி),
(109112சி), (109126டி),
(109126ஈ), (109162ஏ),
(109162பி), (109193ஏ),
(109193பி), (109318ஏ),
(109394ஏ), (109394பி),
(109394சி), (109447ஏ),
(109447பி), (109447சி),
(109530ஏ).
(109530பி), (109530சி),
(109530டி), (110891ஏ),
(110891பி), (110891சி),
(110891டி), (111228ஏ),
(111228பி), (111228சி),
(112267ஏ), (112293ஏ),
(112293பி), (112296ஏ),
(112296பி), (112414ஏ),
(112414பி),
(112483ஏ), (112538ஏ),
(112584ஏ), (112584பி),
(112602ஏ), (112606ஏ),
(112615ஏ), (112617ஏ),
(112619ஏ), (112619பி),
(112619சி), (112632ஏ),
(112632பி), (112650ஏ),
(112650பி).
(112650சி), (112650டி),
(112650ஈ), (112650எவ்),
(112650ஜி), (112657ஏ),
(112659ஏ), (112695ஏ),
(112695பி), (112731ஏ),
(112731பி), (112731சி),
(112740ஏ), (112740பி),
(112740சி). (112740டி),
(112740ஈ), (112740எவ்).
[113778ஏ], [113808ஏ],
[113808பி]. [113818ஏ],
[113818பி], [113818சி],
[113818டி]. [113829ஏ],
[113829பி], [113829சி],
(113829டி), (113829ஈ),
(113834ஏ). (113862ஏ).
(113862பி), (113864ஏ),
(113864பி), (113865ஏ),
(113868ஏ), (113914ஏ),
(113914பி), (113914சி),
(1139114டி), (113914ஈ),
(113928ஏ), (113928பி),
(113929ஏ), (113959ஏ),
(113960ஏ), (113963ஏ).
(113984ஏ). (113984பி),
(113985ஏ), (113990ஏ),
(113990பி), (113993ஏ),
(114011ஏ). (114011பி),
(114014ஏ), (114021ஏ).
(114021பி), (114039ஏ),
(114039பி), (114046ஏ),
(114046பி). (114046சி).

[தொடரும்]

(மூன்றாம் பக்கத் தொடர்)

## மாதிரி விண்ணப்பப்படிவம்

வடக்கு – கிழக்கு மாகாண பொதுச்சேவைக்கு
இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின்
விவசாய போதனாசிரியர் வகுப்பு II 'ஆ' பதவிக்கு
ஆட்சேர்ப்பு செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை –1999

சுட்டெண்: ☐

(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: வண/ திரு/ திருமதி/ செல்வி
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்;-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

03. தற்போதைய நிரந்தர முகவரி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

04. பால்: ஆண் M/ பெண் F ☐

05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி: தமிழ் T / சிங்களம் S ☐

06. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்: ☐

(09வது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)

07. இனம்:
சிங்களவர் — 1
இலங்கைத் தமிழர் — 2
முஸ்லிம் — 3
இந்தியத் தமிழர் — 4
ஏனையவர் — 5 ☐

08 நீங்கள் இலங்கைப் பிரஜையா? வம்சாவளியினாலா/ பதிவு செய்யப்பட்டதனாலா என்பதைக் குறிப்பிடுக.

09. விவாகமானவரா/ விவாகமாகாதவரா?

10. பிறந்த திகதி: வருடம்: மாதம்: திகதி:
1999-10-29 ஆம் திகதியன்று வயது:
வருடங்கள்: மாதம்: நாள்கள்:

11. 1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
2) பிரதேச செயலாளர் பிரிவு:
3) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை
4) வடக்கு—கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின் தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம்:
5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்:............. மாகாணம்: ...........
இடம்பெயர்ந்த ஆண்டு; ....................
மாதம்: ........... திகதி: ...........

12. தொழில்நுட்ப தகைமைகள்:
1) பெற்றுள்ள டிப்ளோமாச் சான்றிதழ்களின் பெயர்:
2) அச்சான்றிதழை வழங்கிய நிறுவனத்தின் பெயர்:
3) டிப்ளோமா சான்றிதழ் நடைமுறைக்கு வரும் திகதி:

13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

☐

14. இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ...................... பிரதேச செயலகத்தின் ...................... ஆம் இலக்க ................ ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

...............................

திகதி:- விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பப்பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலீஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160/–ற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற வண / திரு / திருமதி / செல்வி.................... என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ................ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

...............................

திகதி: கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்:
பதவி:
முகவரி: (பதவி முத்திரை)

17. (வடக்கு—கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்துக்கு இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு )
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு—கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக / வதிவிடமாக கொண்டவர் என்பதையும் அவர் .................... ஆந் திகதி முதல் தற்காலிகமாக இடம் பெயர்ந்து .................... மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ...............................

பிரதேச செயலாளர்/கிராமசேவகர் ஒப்பம்

பதவி:

முகவரி:
(பதவி முத்திரை)

18. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:
இத் திணைக்களத்தில் தற்காலிக/நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வண / திரு/ திருமதி / செல்வி ......................... அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் அவர் தனது சேவைக் காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லைஎன்பதையும்சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ...............................

திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(சி/9266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்க் கந்தன் உற்சவம் ரூபவாஹினியில்

யாழ்ப்பாணம், ஒக். 12
கடந்த மாதம் இடம்பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தேர் மற்றும் தீர்த்த உற்சவங்களின் ஒளிப்பதிவுத் தொகுப்பு இன்று செவ்வாய் இரவு 10 மணிக்கு ரூபவாஹினி அலைவரிசை ஒன்றில் ஒலிபரப்பப்பட உள்ளது.

தொடர்ந்து 10.45 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் வழங்கிய மிலேனியம் இசைநிகழ்ச்சித் தொகுப்பும் ஒளிபரப்புச் செய்யப்படும் என ரூபவாஹினிக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-6)


## கருத்தரங்கு

"புதிய கல்விச் சிந்தனைகள்"

**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**

(கல்வியற்றுறை கொழும்பு பல்கலைக்கழகம்)

கருத்துரை வழங்கும் கருத்தரங்குக்கு ஆசிரியர்கள், தேசிய கல்வி நிறுவனத்தில் கல்வி டிப்ளோமா பயிற்சி பெறும் ஆசிரியர்கள், ஆர்வலர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

இடம்: யா/ இந்துக் கல்லூரி,
காலம்: 12 – 10 – 99 பி. ப. 3.00 மணி.

பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
யாழ்ப்பாணம்.

(69864)


# விமானம் மூலம் திரும்புவோருக்கு உணவு நிவாரணம் வெட்டப்படும்

## புதிய நடைமுறை அமுலாகிறது

மூளாய், ஒக். 12
குடாநாட்டில் உலர் உணவு நிவாரணம் பெறும் ஒருவர் கொழும்பு சென்று விமானம் மூலம் திரும்பினால் உலர் உணவு நிவாரணத்தை இழப்பார்.

இது தொடர்பான சுற்றறிக்கை யாழ். செயலகத்தினால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

குடாநாட்டில்இடம்பெயர்ந்தோருக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் உலர்உணவு நிவாரணத்தைப் பெறும் ஒருவர் வெளிமாவட்டத்துக்குச் சென்று மீண்டும்கப்பல் மூலம் திரும்பினால் மட்டுமே அவருக்கு உலர் உணவு நிவாரணம் மீண்டும் கிடைக்கும் என்றும்—

அவர் விமானமூலம் திரும்பினால் நிவாரணம் நிறுத்தப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புதிய நடைமுறையை உடன் அமுல் செய்யுமாறு யாழ். செயலகம் விடுத்த அறிவிப்பை அடுத்துப் பிரதேச செயலகம் இது தொடர்பான விவரங்களைச் சேகரித்து வருகின்றது.

இதன்மூலம் குடாநாட்டில் உள்ள பல குடும்பங்கள் தமது நிவாரணத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3-99)

## பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 12
நவராத்திரி தினத்தை முன்னிட்டு இணுவில் கந்தசாமி கோயில் இளந்தொண்டர் சபை பேச்சுப் போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

பேச்சுப்போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறும். [க]

## முன்பள்ளி ஆசிரியருக்கு இலவச நூல்

யாழ்ப்பாணம், ஒக். 12
யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் யாழ். மாநகர சகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் வெளியிடப்பட்ட 'பாலர் கல்விப்பாடல்' எனும் நூல் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

96 ஆம், 98 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட இந்த நூலின் இரு பதிப்புக்களும் விநியோகிக்கப்பட்டு முடிவடைந்து விட்டமையால் மூன்றாம் பதிப்பு தற்பொழுது வெளிடப்பட்டுள்ளது.

இதுவரை இந்த நூலைப் பெறறுக்கொள்ளாத முன்பள்ளி ஆசிரியர்களும் பாலர் கல்வியில் ஆர்வமுள்ள நிறுவனங்களும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

[இ-10-30]

## சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா

நெல்லியடி, ஒக். 12
வடமராட்சி தெற்குமேற்கு (கரவெட்டி) பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர்,முதியோர் தின விழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் சமூக சேவை அலுவலர் க. தியாகராசா வரவேற்புரை நிகழ்த்துவார். 'முதியோரைப் பேணுவோம்' என்ற தலைப்பில் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பு. நடராஜாவும், 'சிறுவர் உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பில் சமுர்த்திமுகாமையாளர் ஆ. இரகுநாதனும் ''இன்றைய சிறுவர்கள் நாளைய முதியவர்கள்'' என்ற தலைப்பில் நிர்வாக அலுவலர் இ. சிவபுண்ணியமும், 'முதியோர் எம் தேசிய சொத்துக்கள்' என்ற தலைப்பில் பண்டிதர் க. முத்துவேலுவும், 'முதியோர்கள் வாழ்வின் முன்னோடிகள்' என்ற தலைப்பில் நெல்லியடி கிழக்கு கிராம அலுவலர் சி. குணராசாவும், 'சிறுவர்களும் முதியவர்களும்' என்ற தலைப்பில் வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரமும் ''முதியோரின் அனுபவத்தை தேசிய அபிவிருததிக்கு பயன்படுத்துவோம்' என்ற தலைப்பில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ஆ. சிவநாதனும் சிறப்புரையாற்றுவார்கள்.

இதனையடுத்து கவிதை கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, பரிசில்களும், முதியோர்களுக்கு அன்பளிப்புக்களும் வழங்கப்படும். தென் அல்வாய் ஜானகி இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்,

(இ-109)




[சி/9262]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூரோமைன்ட்

அக்ரிவ் மல்ரி டிரைக்சுனல்
அன்டனாவில் பூஸ்டர் பொருத்தப்பட்டுள்ளது



* அனைத்து அலைவரிசைகளிற்கும் ஒரே அன்டனா
* ஜேர்மன் தொழில்நுட்பம்

LANKA NIPPON
No. 18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place, (Behind Milk Bar), Bambalapitiya Junction,
Colombo 4. Tel: 589992

(சி/9181)



உங்கள்

# சிற்றியின் அதிரடி மலிவு விற்பனை

இன்று முதல் அனைத்துரக சூட்டிங்குகளையும், விற்றுத்தீர்த்தல்! குதூகலமான உங்கள் தீபாவளியின் செலவை மீதப்படுத்தவும் அழகுக்கு அழகு சேர்க்கும் ஆடைகள் தெரிவுக்கும் றெடிமேற் ஆடைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
இன்றே சங்கமமாகுங்கள்.

★ 400/- விற்பனையாகும் சூட்டிங்குகள் 200/- வில் பெற்றுக்கொள்ளலாம்.

சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்
இல. 73, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
T. P. 2671

முந்துங்கள் ! இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

(சி/9292)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை**
(பிரபல பண்ணிசைப் பாடகர்)

தோற்றம்: 14-01-1927 மறைவு: 08-10-1998

திதி: 12 - 10 - 1999

ஆண்டொன்று சென்றதையா
உம் பாட்டொன்று கேட்கவையா
எமக்கு ஆசையாய் இருக்குதையா
பாசமாய் வளர்த்து விட்ட எங்கள் ஐயாவே.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

414/5, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[69850]

# தொல்லைதவிர்ப்புக் குழுவுக்கு கடிதம்

கொழும்பு, ஒக். 12

வவுனியா, மன்னார் பகுதிகளிலிருந்து கொழும்புக்குப் பயணம் மேற்கொள்பவர்கள் அனுபவிக்கும் சிரமங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா, மன்னார் பகுதிகளிலிருந்து கொழும்புக்கு பயணம் செய்பவர்களுக்கு 15 நாள் 'பாஸ்' மட்டுமே வழங்கப்படுகிறது.

இவ்வாறு பாஸ் பெற்றுச் செல்வோர் தமக்கென பிணையாளி ஒருவரை வைத்து விட்டே செல்ல வேண்டும்.

இந்த நடைமுறை அடிப்படைச் சட்டத்துக்கு முரணானது. எனவே தொல்லை தவிர்ப்புக்குழு இதனை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

இப்படி அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

# வாய்க்கால் திருத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 12

கைதடி மேற்கு அம்பந்தை வெள்ள வாய்க்கால் சிரமதான முறையில் திருத்தப்பட்டுள்ளது.

கைதடி மேற்கு கிராம அலுவலர் சு. செல்வராசா தலைமையில் கடந்த சனிக்கிழமை இந்தவாய்க்கால்கிராமமக்கள் மற்றும் விவசாயிகளின் உ வியுடன் திருத்தம் செய்யப்பட்டது.

(க)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 12

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பொறியியல் தொழில் நுட்பத்துறை என்னும் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பும் படியும் —

இதற்கான விண்ணப்பப் படிவங்களை மேற்படி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதன் இயக்குநர் ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்

(க)

# இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி, ஒக். 12

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மந்துவில், வேம்பிராய், மீசாலை வடக்கு, தாவளை, இயற்றாலை ஆகிய பகுதி மக்களுக்கான இலவச மருத்துவ சிகிச்சை முகாமை எதிர்வரும் வியாழக்கிழமை மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் நடத்த உள்ளனர்.

இந்த சிகிச்சை முகாமில் கண், நீரிழிவு. இரத்த அமுக்கம், வாய்ப்புற்று, தொழுநோய் ஆகிய நோய்களுக்கான பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளதாகவும்—இதில் கலந்து கொள்ளவுள்ள மக்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெயர்களைப் பதிவு செய்யுமாறு — கழகச் செயலாளர் [illegible] அறிவித்துள்ளார்.

(க-117)


# வெள்ளி விழா மலர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க வெள்ளிவிழா இலங்கை மலர் பல பக்கங்களுடன் வெளிவந்துவிட்டது. அரிய கட்டுரைகள், உ.த.ப. இன் வரலாற்றுத் தகவல்கள் மற்றும் பல் சுவை அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆசிரியர் ஆ, சண்முகலிங்கம்
பக்கம் 70

விலை ரூபா 50.

அஞ்சல் வழியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
முகவரி: ஆ. சண்முகலிங்கம்,
விக்னா நிலையம்,
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(69832)


# விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
1909 — 03 — 26



விண்ணில்
1999 — 09 — 12

அமரர் நீக்கிலாஸ ஆசீர்வாதம்

மாசில்லா புன்னகை மறைந்ததேன்!
மாணிக்க விளக்கொன்று அணைந்ததேன்?
மண்ணக வாழ்வதனில் தாம் செய்த
மறைப்பணியை மறக்குமோ எம் மனங்கள் ஐயா!
நிலவுதித்த தங்களது வதனத்தை — நாம்
நிதம் நினைந்து தவிக்க வழி செய்தனையோ
ஆறாத எம் மனங்கள் அமைதி பெற — ஓர்
ஆறுதல் வார்த்தைதனைக் கூறப்பா!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்,

இவர் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்

இத்தாவில், பளை.

(69859)

# சேவை நலன் பாராட்டு



அருட்சகோதரி மேரி யூவேமியா
B. A. (Dip. in Edu, S.L.P.S II)
(அதிபர், யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை)

38 ஆண்டுகள் கல்வித்துறைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, அதில் 14 ஆண்டுகளாக இப் பாடசாலையின் இணையற்ற அதிபராகக் கடமை புரிந்த அருட்சகோதரியின் சேவையை நன்றியுடன் நினைவு கூர்ந்து அவரின் ஓய்வுக்காலம் சேவையும் அமைதியும் உடல்நலமும் நிறைந்ததாக அமையப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

(69816)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போரின் நிழலில் ஆட்சியா?

இந்த நாட்டில் போர் இப்போதைக்கு ஓயமாட்டாது என்ற கெட்ட செய்தியை உறுதிப்படுத்தும் தகவல்கள் அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கின்றன!

விமானக் குண்டு வீச்சு நடத்துவதற்கு நவீன ஆயுதங்களும் நவீன இராணுவத் தொழில் நுட்பங்களும் பயன்படுத்தப்படுகின்றன என்பது முதலாவது. நவீன போர் விமானங்கள், போர்க் கப்பல்கள், ஹெலிக்கொப்ரர்களை வாங்குவதற்கு அரசாங்கப் படைகள் உலக நாடுகளிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரியுள்ள தகவல் அடுத்து வந்தது.

போரை நவீனமயப்படுத்துவதற்கான இந்த ஏற்பாடுகளுக்காக பாதுகாப்புச் செலவின ஒதுக்கீடு அடுத்த வருடத்தில் 12 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருக்கும் விடயம் மூன்றாவதாக வந்தது.

இப்போதோ, இவற்றைச் சரியென திண்ணமென உறுதி செய்யும் நாலாவது தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது. ''இராணுவத்தின் பணி முக்கியமாக உள்ளதால் அதற்குத் தேவையான நவீன வசதிகளைச் செய்து கொடுக்க உள்ளோம்'' என்று கூறி முன்னர் வந்த தகவல்கள், நிலைப்பாடுகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

இலங்கையில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைநாட்ட இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதால் அவர்களுக்கு நவீன வசதிகள் விரைவில் வழங்கப்படும். இராணுவத்தினரின் பணி முக்கியமானதாக உள்ளதால் அவர்களுக்கு நவீன வசதிகளை விரைவில் வழங்கப்போகிறோம் — என்று ஜனாதிபதி காரணங்களைத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை இராணுவம் இன்னொரு நாட்டுடன் போரிடும் சாத்தியம் என்றைக்கும் வராது. அது கடலின் நடுவே இருப்பதால் எல்லைச் சண்டைக்கு இடமில்லை அண்டை நாடுகளான இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுத நாடுகளாக உருவெடுத்து வருகின்றன. ஆகையால் வெளிநாடு ஒன்றுடன் இலங்கை சண்டையிடும்வாய்ப்பே இல்லை.

எனவே இந்த இராணுவ நவீன மயம் எல்லாம் இப்போது உள்நாட்டில் நடைபெறும் போரைத் தொடர்வதற்கே என்பது சொல்லாமலே விளங்கும். போருக்கு மூல காரணம் இனப்பிரச்சினை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே தமது நோக்கம் என்பதை ஜனாதிபதியும் அவரது அரசைச் சேர்ந்தவர்களும் மறந்து விடாமல், ஞாபகத்தில் வைத்திருந்து அடிக்கடி சொல்லி வருகிறார்கள்!

அரசியல் தீர்வு காண்பதற்கு இராணுவத்தை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை ஏது? நாட்டின் வருமானத்தில் கால் வாசிக்கு மேல் போருக்காகச் செலவிட்டுக் கொண்டு. இராணுவத்தை நவீன மயப்படுத்துவது முழுக்க முழுக்க இராணுவத் தீர்வை நாடியதே. இதனை மறைக்க முயல்வதும் மழுப்புவதும் மக்களை ஏமாற்றும் செயலாகும்.

போரை முனைப்போடு நடத்தித் தீவிரப்படுத்துவதற்காகவே, இராணுவத்தை நவீன மயப்படுத்துவதை நியாயப்படுத்தும் பல காரணங்களை சந்திரிகா முன்வைக்கிறார். போரைத் தீவிரப்படுத்துவது என்பது தமிழர்களை மேலும் மேலும் அழிப்பதற்கான வழிமுறையே.

கூட்டிக் கழித்துக் கணக்குப் பார்த்தால், போரை நீடித்து, அதன் நிழலில் ஆட்சியை நடத்துவதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்பது புலனாகிறது அல்லவா?

# அன்றாட வாழ்வை மேம்படுத்தவே யாழ். மக்கள் கடன் பெறுகின்றனர்

> யாழ். குடா நாட்டில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளைகள் மூலம் பொதுமக்களுக்கு எவ்வகையான கடன்கள் வழங்கப்படுகின்றன? அவற்றை எவ்வாறு பெற முடியும்? என்பன தொடர்பாக இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் விளக்கமளித்துள்ளார். அது தொடர்பாக அவர் அளித்த செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.

குடாநாட்டு மக்கள் மனதில் நிலவும் நிச்சயமற்ற தன்மை காரணமாக அவர்கள் பெரிய முதலீடுகளில் அக்கறை காட்டுவதில்லை. தமது அன்றாட வாழ்க்கையை மேம்படுத்த மட்டுமே கடன் பெறுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

இலங்கை வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் க. பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

வங்கிக்கடன், பெறும் முறைகள், அவற்றில் மக்கள் காட்டும் ஆர்வம், அந்தக் கடன் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் ஆகியன தொடர்பாக அவர் உதயனுக்கு செவ்வி ஒன்றை அளித்தார்.

செவ்வி வருமாறு:

கேள்வி:- விவசாய அபிவிருத்திக்கு வழங்கும் கடன் மற்றும் அந்தக் கடன்பெறும் வழி முறைகள் பற்றி விளக்குவீர்களா?

பதில்:- விவசாய அபிவிருத்திக்காக குறுகிய காலக்கடன் திட்டம் ஒன்றை அமுல் செய்துள்ளோம் இந்தக் கடன் ஆறுமாத காலம் முதல் எட்டு மாத காலத்துக்குள் மீளளிக்கப்பட வேண்டும்.

விவசாயிகளால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை ஆராய்ந்து விவசாய அதிகாரி சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் கடன் வழங்கும் தொகை நிர்ணயிக்கப்படும்.

விவசாயி தான் பெறும் கடனை தனது பயிர் அறுவடையின் போது மீளளிக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் பணத்தை மீளளிப்பதில் பிரச்சினைகள் எதனையாவது எதிர்நோக்கினால், அதுபற்றி தெரிவிக்க வேண்டும். அந்தப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அவை ஏற்கக் கூடியதாகஇருந்தால் கால அவகாசம் வழங்கப்படும்.

கேள்வி: வேறு என்ன விதமான கடன்களை வழங்குகிறீர்கள்?

## நிச்சயமற்ற தன்மை காரணமாக பாரிய முதலீட்டில் ஆர்வம் இல்லை

சிறுபோகம், பெரும்போகம் என இரு காலப் பகுதிகளில் இந்தக் கடன் வழங்கப்படும்.

ஒக்ரோபர் முதல் பெப்ரவரி வரை பெரும்போகத்துக்கும், ஓகஸ்ட் முதல் செப்ரெம்பர் வரை சிறுபோகத்துக்கும் கடன் வழங்கப்படுகின்றது. பெரும்பாலான விவசாயிகள் பெரும்போக விவசாயத் தேவைக்கே கடன் கோருவார்கள்.

பெரும்போகத்துக்கு கடன் வழங்குவதற்கு ரூ. 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். சில சமயங்களில் இந்த ஒதுக்கீடு போதாமல் இருக்கும்.

விவசாயக் கடன் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா வரையில் 12 சதவீத வட்டிக்கு வழங்கப்படுகின்றது.

இந்தக் கடனைப் பெற விரும்புபவர்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கு ஒன்றை முதலில் ஆரம்பிக்க வேண்டும். அந்த அந்தப் பிரதேச விவசாய அபிவிருத்திச் சங்கத்தின் சிபார்சைப் பெற்று இரு பிணையாளிகளுடன் கிளை முகாமையாளரை அணுகினால கடனைப் பெறமுடியும். முன்னர் கடன் பெற்று மீளச் செலுத்தாதவர்கள் பிணையாளியாக இருக்க முடியாது.

### சுயதொழில் வாய்ப்புக் கடன்

பதில்: சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தத்தக்க வகையில் 10 ஆயிரம் ரூபாவை 13.5 சதவீத வட்டிக்கு வழங்குகிறோம். இந்தக் கடனை எவரும் பெறலாம். அரசாங்க ஊழியர்கள் கூட இந்தக் கடனைப் பெறலாம்.

கோழிப்பண்ணை அமைத்தல், சிறு வியாபாரத்தை ஆரம்பித்தல், தையல் தொழில் மேற்கொள்ளல் போன்றவற்றுக்காக வழங்கப்படும் இந்தக்கடனை இரு வருடங்களில் மீளளிக்கலாம். ஆரம்பித்த தொழிலில் நல்ல வருமானம் கிடைக்கும் பட்சத்தில் கால எல்லைக்கு முன்பே கடனைச் செலுத்தலாம் அதன் பின்னர் மீண்டும் கடன் பெற வாய்ப்பு உள்ளது.

இந்தக் கடனை வழங்க 170 லட்சம் ரூபா சுழற்சி முறையில் பயன்படுத்தப்படுகின்றது. கடன் பெற்றவர்கள் கடனை மீளச் செலுத்த மேலும் பலருக்கு கடன்வழங்கப்படுகின்றது.

வங்கிக்கிளை ஒன்றில் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து, இருபிணையாளிகளின் சிபார்சுடன் இந்தக் கடனைப் பெறமுடியும்.

இந்தக் கடனைப் பெறுவதற்கு வயது எல்லை இல்லை. 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் பெறமுடியும். தமது மகன் அல்லது மனைவியை இணைத்து அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

93 ஆம் ஆண்டு இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. குடாநாட்டில் இடம்பெயர்வு காரணமாக இந்ததிட்டத்தின் கீழ் பெற்ற கடனை பலர் மீளச் செலுத்தவில்லை.

தற்சமயம் இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெறுபவர்கள் ஒழுங்காக மீளச் செலுத்துவதால் மேலும் பலருக்குக்கடன் வழங்கக் கூடியதாக உள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெறுபவர்களின் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தும் விடயம் முக்கிய கவனத்தில் எடுக்கப்படும்.

### ரூபா 50 ஆயிரம் கடன்

சுயதொழில் வாய்ப்புக்காக 'சுரதுர' என்று மற்றுமொரு கடனும் வழங்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒருவர் 50 ஆயிரம் ரூபா வரை கடன் பெறலாம். இந்தக் கடனுக்கு 10 சதவீத வட்டி அறவிடப்படும்.

சமுர்த்தித் திட்டத்தில் சேராதவர்களுக்கு வழங்கப்படும் இந்தக் கடன் 24 முதல் 36 மாதங்களுக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டும்.

இந்தக் கடனை வழங்க 114 லட்சம் ரூபா ஒதுக்கப் பட்டிருந்தது. முழுத்தொகையும் கடனாக வழங்கப்பட்டு விட்டது.

கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுடன் இந்தக் கடனைப் பெறமுடியும்.

இதைவிட கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பயிற்சி பெற்றவர்களுக்கு 35 லட்சம் ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளோம் அவர்கள் பெற்ற பயிற்சியின் மூலம் சுய தொழில் ஒன்றை ஆரம்பிக்க இந்தக்கடன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### புனர்வாழ்வு புனரமைப்புக்கும் கடன்

கேள்வி: புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு கடன் வழங்குகிறீர்களா?

பதில்: புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்குக் கடன் வழங்க முடிவு செய்துள்ளோம். கடன் பெற விரும்புபவர்கள் தமது பிரிவு கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோர் மூலம் யாழ். அரச அதிபருக்கு விண்ணப்பிக்க வேண்டும். வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைக்கு அவர் அனுப்புவார்.

அங்கு இந்த விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு எமக்கு அனுப்புவார்கள். அதன்பின்னர் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து, கலந்துரையாடி, வங்கியின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப அவருக்கு கடன் வழங்குவோம். இந்த வகையான கடன் இதுவரை வழங்கப்படவில்லை.

### மக்களுக்கு நாட்டம் இல்லை

கேள்வி:- கைத்தொழில்களை ஆரம்பிக்க பாரியகடன் வழங்கும் திட்டம் ஏதாவது உண்டா?

பதில்:- பெரிய தொகையான கடன்களை வழங்கப் பல திட்டங்கள் உள்ளன. ஆனால் அத்தகைய கடன்களைப் பெறுவதில் மக்கள் அவ்வளவாக நாட்டம் கொள்ளவில்லை. மக்கள் மனதில் நிலவும் நிச்சயமற்ற தன்மை காரணமாக அவர்கள் இத்தகைய கடன்களைப் பெறுவதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. தமது அன்றாட வாழ்க்கையை மேம்படுத்த வசதியாக சிறிய கடன்களை மட்டுமே அவர்கள் பெறுகின்றனர்.

கேள்வி:- கடன் பெறுவது தொடர்பாக மக்களுக்கு ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

பதில்:- பொதுமக்கள் தாம் பெறும் கடன்களை ஒழுங்காக குறிப்பிட்டகாலத்தில் செலுத்துவதன் மூலம் மேலும் பலர் கடன்களைப் பெற உதவமுடியும். அதை உணர்ந்து கடன் பெறுவோர் செயற்பட வேண்டும்.

★

செவ்வி கண்டவர்:
மாவை குகன்

---

**நாளை**

புரட்டாதி 26
புதன்கிழமை
திதி: சதுர்த்தி
முன் இரவு 10.51 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
பின்இரவு: 4.45 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 4.32—6.02
ராகுகாலம்: 12.02— 1.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

---

**உதயவாக்கு**

மற்றவர்களை நீங்கள் மதிக்க வேண்டியது தான் ஆனால் அதைவிட முக்கியமானது, உங்களை நீங்களே மதித்துக்கொள்ள வேண்டும்.

பிதாகோரஸ்

---

### குருநகர்அரசினர் ஆஸ்பத்திரி

## பிரசவ விடுதியை மீண்டும் இயங்க வைக்கக் கோரிக்கை

குருநகர், ஒக். 12

''குருநகர் அரசினர் வைத்திய சாலையில் இயங்காத நிலையில் இருக்கும் பிரசவ விடுதியை மீண்டும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை குருநகர் சென்றேக்ஸ் சனசமூக நிலையம் யாழ். சுகாதார திணைக்கள பிரதி மாகாணப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1995 ஆம் ஆண்டு இடம் பெற்ற இடப்பெயர்வுக்கு முன்பு மிகவும் சிறப்புடன் இந்த வைத்தியாலை இயங்கி வந்தது.

மீளக்குடியமர்வுக்குப் பின்னர் பிரசவ விடுதியில் கட்டில் வசதி இன்மை குடும்ப நல சேவையாளர் தங்குமிட வசதி இன்மை போன்றசிலகாரணங்களைக் கூறி பிரசவ விடுதியை மீளவும் ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட பல லட்சம் ரூபாவில் பிரசவ விடுதிக்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டன. வைத்திய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன, குடி தண்ணீர் வசதி உட்பட பல வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. ஆனாலும் இந்த விடுதி இப்போது இயங்காமல் உள்ளது.

இந்தப் பகுதிப் பிரசவத் தாய்மாருக்கு பெரும் உதவியாக இருக்கும் இந்தப் பிரசவ விடுதியை இயங்க வைத்து பிரசவத் தாய்மார்களுக்கு ஏற்படும் வீண் சிரமங்களை நீக்க உதவ வேண்டும் — என்றுள்ளது. (இ-க-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### யாழ்ப்பாணம்

யாழ். சேவையில் ''பேய் வீடு'' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் (1) யாழ்ப்பாணமா கொழும்பா? நாடக நூல் (2) யாழ்ப்பாணம் சிறுகதைத் தொகுதி (3) நாடகம் எழுதுவது எப்படி? ரூபா — 50.
69857)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிசில் (டிலெக்ஸ்) குளிர்சாதனப் பெட்டி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: சோ. சிவராசா, மோட்டார் சைக்கிள் மெக்கானிக், இல. 97. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(69849)

### வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் றிக்கோ பத்மநாதனின் இல. 22/3 A, விதானையார் வீதியில் உள்ள மாடி வீடு உடன் விற்பனைக்கு உண்டு. காலை 9 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும். (69689)

### தவறிவிட்டது

09 – 10 – 99 சனிக்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கந்த ரோடை ஊடாக அளவெட்டி செல்லும் 768 இ. போ. ச. பஸ்ஸில் நகைப் பெட்டி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். க. சீனன் கும்பலை அளவெட்டி கிழக்கு அல்லது. நியூ பிரியங்கா நகைமாளிகை 177 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(69858)

யாழ். கந்தர்மடம், அரசடி வீதி, இல, 133 எனும் முகவரியைச் சேர்ந்த சிவகுருநாதர் சிவசுப்பிரமணியம் (அஞ்சலதிபர்) என்பவரின் (403272035 X) தேசிய அ. அ. மற்றும் தபால் திணைக்கள அடையாள அட்டை, மூக்குக் கண்ணாடி என்பன யாழ். பெருமாள் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் அல்லது யாழ். அஞ்சலத்தியட்சகர் அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். (69860)

### தேவை

எம்மிடம் சகல மதத்தவர்களிலும் ஆண், பெண் உத்தியோக மணமக்களும் கிறிஸ்தவ உத்தியோக மணமக்களும் இருக்கிறார்கள். தொடர்பு: துர்க்கா திருமண சேவை 178 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
((69862)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 1Kg 120/- தொடர்பு: இல. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு), விதானை வளவு, பொன்னாலை வீதி. மானிப்பாய். (69634)

## மாதாந்த உதவிப்பணம்

நெடுந்தீவில் உதவிப்பணம் பெறுபவர்களுக்கான செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு நாளை புதன்கிழமை தொடக்கம் நெடுந்தீவு தபாலகத்திலும் ஏனைய இரு உப தபாலகங்களிலும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் இரண்டாம் வருட தமிழ்நெறியைச் சேர்ந்த சிரேஷ்ட மாணவத் தலைவி
**செல்வி யாழ்மொழி குருபரலிங்கம்**
அவர்களின் அன்புத் தாயாரான
**திருமதி இராஜபூபதி குருபரலிங்கம்**
அவர்களின் மறைவுக்கு கலாசாலைச் சமூகமாகிய நாம் எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், பிரதி அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்.

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.** (69868)

---

## நினைக்கின்றோம் மனத்துன்னை

**திருமதி பரமேஸ்வரி கார்த்திகேசு**
( ஆசிரியர், யா / தந்தை செல்வா தொ. நி. பள்ளி)

எமது பள்ளியின் உயர்ச்சிக்கும்
மாணவரின் வளர்ச்சிக்கும் – உங்கள்
நோயையும் பாராது சேவையாற்றினீர்கள்
ஓய்வு பெற வேண்டும் என்று எண்ணினீர்களே
இன்று நிரந்தரமாகவே ஓய்வு பெற்றுவிட்டீர்களே

எமை விட்டுப் பிரிந்து மாதம் ஒன்றானாலும்
என்றும் எங்கள் நினைவில் நிற்பீர்கள்.
உங்கள் ஆத்ம சாந்திக்கு எமது பிரார்த்தனைகள்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச் சங்கம்.
**யா/தந்தை செல்வா**
**தொடக்க நிலைப் பள்ளி**

தெல்லிப்பழை. [69872]

---

## துயரஞ்சலி

நயினை உயர்திரு **வேலாயுதபிள்ளை** அவர்களின்
அன்பு மகனும்
சாவகச்சேரிப் பிரதேச சபையின் செயலாளருமான
**அருணந்தி**
அவர்கள் அகாலமரணமடைந்ததையிட்டு நெடுந்தீவுப் பிரதேச சபை அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்துள்ளது.

அன்னாருக்கு துயரஞ்சலியையும் அவரின் ஆத்மா சாந்தியடைய இறையஞ்சலியையும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் சபை சமர்ப்பிக்கின்றது.

தலைவர், உறுப்பினர்கள், செயலாளர்.
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

**நெடுந்தீவுப் பிரதேச சபை.** (சி/9302)

---

## வாழ்த்தி வரவேற்கின்றோம்



திருமதி
**கோமளம் அம்பலவாணர்** B.Sc., Dip, in Ed.
[அதிபர், யா/ சரஸ்வதி மகா வித்தியாலயம்]

சமூக சேவையாளரும் எமது பாடசாலை அதிபருமாகிய
**திருமதி கோ. அம்பலவாணர்** அவர்கள்
சமாதான நீதிவானாகப் பதவி ஏற்றதையிட்டு அவரது சேவை மேன்மேலும் வளரவேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அராலி வண்ணப்புரம் சிவன் தேவஸ்தான
பரிபாலன சபையினரும்,
அராலி சுழனன் முருகன் தேவஸ்தான
பரிபாலன சபையினரும்.

(சி/9298)

---

எமது கலைத்துறை விரிவுரையாளர்களுக்கு
## எம் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

▶★★★★★★★★★★★◀

கல்வியிலே கரைசேர
கலங்கரை விளக்கானீர்
காலமுள்ளவரை ...
கலைத்துறை மாணவர் நாம்
நெஞ்சினிலே ...
நன்றி தீபம் ஏற்றிடுவோம்

வாழ்த்துவோர்:

கலைத்துறை பட்டதாரி மாணவர்கள்,
**வெளிவாரி பட்டப்படிப்புக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு: 17—10—99 ஞாயிறு காலை 9 மணிக்கு கல்லூரிக்கு கலைத்துறை மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

[69863]

---

## 13 ஆவது பிறந்த தின நினைவலைகள்

தோற்றம் 12 – 10 – 1986



மறைவு 23 – 05 – 1998

**தூ. போல் கஜேந்திரன்**
(ஆண்டு 7, பரி. யோவான் கல்லூரி மாணவன்)


இன்று உனது பிறந்ததினம் என நினைத்தோம்
இனியவன் நீ இல்லையென விழி நனைந்தோம்
இணைந்திருந்தாய் பன்னிரண்டு வயது வரைக்கும்
நீ இல்லையெனும் நினைவில் மனம் புயலடிக்கும்.

உன் பிரிவால் துயருறும்
அன்பு அம்மா, அப்பா. சகோதரர்கள்.

வே. தூயகுமாரன்,
பாதுகாப்புப்பகுதி,
யாழ். பல்கலைக்கழகம். [69869]

---

## 10 ஆம் ஆண்டு நினைவு



அமரர்
**செல்லையா அரியரத்தினம்**
(முன்னாள் உத்தியோகத்தர், இலங்கை வங்கி)

தோற்றம்: **20- 11- 1926**
மறைவு: **02- 10- 1989**

சென்ற இடமெல்லாம்
சிறப்பளித்தீர் சீர் பெறவே!
மங்காப் புகழ் கொண்டு
மாண் புறவே வாழ்ந்திருந்தீர்!

— குடும்பத்தினர்

கோயில் வாசல்,
இணுவில். (69785)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

## நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்

# முதல் இன்னிங்ஸில் சுருண்ட இந்தியா

# மீளத் த...னை ஸ்திரப்படுத்த முயற்சி!

மொஹாலி ஒக். 12

மொஹாலியில் நேற்று முன்தினம் ஆரம்பமான — நியூஸிலாந்துக்கு எதிரான — முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 83 ஓட்டங்களுடன்சுருண்ட இந்திய அணி, நேற்று இரண்டாவது நாள் ஆட்டத்தின் போது தனது நிலையை மீள ஸ்திரப்படுத்துவதில் ஓரளவு வெற்றி கண்டது.

நேற்று நியூஸிலாந்து அணியை முதல் இன்னிங்ஸில் 215 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்ததுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 115 ஓட்டங்களைப் பெற்று தன்னை ஓரளவு அது வலுப்படுத்திக் கொண்டது.

நேற்று முன்தினம் ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 119 ஓட்டங்களைப் பெற்றிருந்த நியூஸிலாந்து அணி 215 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நியூஸிலாந்து தரப்பில் நேற்று முன்தினம் அரைச் சதம் அடித்த ஸ்பயன்மன்னைத் தொடர்ந்து இன்று அஸ்ட்லே 45 ஓட்டங்களையும் கிரெய்க் மக்மிலன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணி தரப்பில் மிகச் சிறப்பாகப் பந்து வீசிய ஜவகல் ஸ்ரீநாத் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் இந்திய அணி பெற்ற மிகக் குறைந்த எண்ணிக்கையான—83 ஓட்டங்களில்—தனி ஒருவராக அதிக எண்ணிக்கையில் 20 ஓட்டங்களைக் குவித்தவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று ஆட்டநேர இறுதியின்போது இந்திய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சடகோபன் ரமேஷ் 58 ஓட்டங்களுடனும் டெவன் காந்தி 52 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (உ-4-8)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஒக். 12

கல்வியங்காடு நொதேண் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'பரா' வெற்றிக்கேடயத்துக்கான —ஏழு பேர் பங்குபற்றும் அணிகளுக்கு இடையிலான — மட்டுப்படுத்தப்பட்ட 12 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் முதல் சுற்று ஆட்டங்களில் விக்ரறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை விளையாட்டுக்கழக அணி மோதும். இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு செங்குந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். (உ)

## கரப்பந்தாட்டச் சம்பியன்

வலி-கிழக்கு, ஒக். 12

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் 'உதயன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக் கழக அணி சம்பியனானது.

நேற்று முன்தினம் கல்வியங்காட்டில் உள்ள சங்கமைதானத்தில் யாழ். பல்கலைக் கழக அணிக்கும் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற 'செற்றப்' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி 2-17, 25-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டியது.

இதே வேளை முடமாவடி ஞான வைரவர் விளையாட்டுக்கழக அணிக்கும் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெறவிருந்த — 4 பேர் கொண்ட ''ஓவர் கேம்'' சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் ஆட்டத்திற்கு சமுகம் தராததால் நடைபெறவில்லை. இதனால் முடமாவடி ஞான வைரவர் விளையாட்டுக்கழகம் முதலிடத்தைப் பெற்றது.

இந்த இறுதியாட்டத்தின் பின் இடம்பெற்ற பரிசளிப்பு விழா நிகழ்வுகளில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சட்டத்தரணி க. கேசவன், லயன் - டாக்டர் வை. தியாகராஜா ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். (உ-180-8)

## 22 வயதுக்கு உட்பட்ட

# வலைப்பந்தாட்ட அணி மாவட்ட ரீதியில் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். மாவட்ட - 22 வயதுக்கு உட்பட்ட — வலைப்பந்தாட்ட அணி ஒன்றை யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் தெரிவுசெய்யவுள்ளது.

இதற்கான தெரிவுப் போட்டிகள் நாளை மறுதினம் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு கழகமும் பாடசாலைகளும் ஐந்துக்கு மேற்படாத வீராங்கனைகளை அத்தாட்சிப்படுத்தும் கடிதங்களுடன் இந்தத் தெரிவுக்கு அனுப்பிவைக்கலாமென மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் அறிவித்துள்ளது. (உ-4-8)

# உதைபந்தாட்ட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் புனித மரியாள் வித்தி. (துரையப்பா விளையாட்டரங்கு)

★ கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தி. எதிர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி. (புத்தூர் சோமஸ்கந்தா மைதானம்)

★ யாழ். ஹிந்துக் கல்லூரி எதிர் உரும்பிராய் இந்துக்கல்லூரி (புத்தூர் சோமஸ்கந்தா மைதானம்)

**18 வயதுப் பிரிவு**

★ நாவாந்துறை றோ.க.த. எதிர் கொக்குவில் இந்து (துரையப்பா விளையாட்டரங்கு)

★ பெரியபுலம் ம. வி. எதிர் சோமஸ்கந்தா கல்லூரி (துரையப்பா விளையாட்டரங்கு)

★ இடைக்காடு மகா வித்தி. எதிர் புனித சாள்ஸ் வித்தி. (புத்தூர் சோமஸ்கந்தா மைதானம்)

(உ-4-8-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். உதைபந்தாட்ட லீக், யாழ். மாவட்ட ரீதியில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் இன்று மாலை 4. 45 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யுத்காமல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றிக்ளஸ் விளையாட்டுக்கழக அணி விளையாடும். (உ-8)

★ ★ ★

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்கும் இடையிலான— 16, 18, 20 வயதுப் பிரிவு— சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-4)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஈ. ஆர். போக்குவரத்துச் சேவை ஆதரவிலும் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடனும் வடமராட்சி ரீதியில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் கால்இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு—டயமன்ஸ் வி. க. எதிர் சென் அன்ரனீஸ் வி. க.

★ மாலை 5 மணிக்கு திக்கம் இளைஞர் வி. க. எதிர் பருத்தித்துறை ஐக்கிய வி. க

(உ-4-8)

## கால் இறுதி ஆட்டங்கள்

வடமராட்சி, ஒக். 12

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் நேற்று ஆரம்பமாகின.

16 வயது, 18 வயது பிரிவு அணிகளது போட்டிகள் திக்கம் மைதானத்தில் இடம் பெறும்.

இந்தச் சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் இதே மைதானத்தில் இடம் பெறும். (ஐ-8)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பண்டத்தரிப்பு தென் இந்தியத் திருச்சபையின் சபை ஊழியனும் பண்டத்தரிப்பு Y. M. C. A. யின் உப தலைவரும் இளைஞர் விவகார செயலாளருமாகிய

**சகோ. சின்னவன் ஸ்ரீபன்** அவர்களை

யாழ். பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டமும் கலைப் பீடத்துக்கான பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தையும் பெற்றமைக்காக Y. M. C A. அங்கத்தவர்கள் சார்பாகவும் பண்டத்தரிப்பு திருச்சபையினர் சார்பாகவும் மனதார வாழ்த்துகின்றோம்.

திரு. A. K. சின்னத்தம்பி (செயலாளர்)
தென் இந்தியத் திருச்சபை
திரு. பொபி. இராஜேந்திரகுமார் செயலாளர்)
Y. M, C. A. பண்டத்தரிப்பு.

(69877)

# கண்ணீர்க் காணிக்கை

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான
பிரதம சிவாச்சாரியர்களான
**சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்கள்**
**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்**
ஆகியோரது அன்புத் தாயார்
திருமதி
**நாகேஸ்வரசர்மா தேவகுஞ்சராம்பாள்**

அவர்கள் 10-10-99 அன்று சிவபதம் எய்தியமையிட்டு துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர்க் காணிக்கை செலுத்துகின்றோம்.

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானம்

(69876)

# கண்ணீர் அஞ்சலி

வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளையில்
கடமையாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்
**திரு. வி. கனகசபை**
அவர்களின் அன்பு மகனும்
எமது சக ஊழியர்
**திரு. க. துவிதரன்**
அவர்களின் பாசமிகு சகோதரனுமாகிய
**க. கவிதரன்**
( ஊழியர், மக்கள் வங்கி, பருத்தித்துறை )

08 - 10 - 1999 இல் அகால மரணம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர்களும் ஊழியர்களும்.

மக்கள் வங்கி,
வல்வெட்டித்துறை.

(சி/9312)

# சேவை நலன் பாராட்டு

நெல்லியடி பொது நூலகத்தில் முப்பது வருடங்கள்
திறமையாகச் சேவை புரிந்த
**திருவாளர் ஆ. அம்பலவாணர்**
அவர்களின்
சேவையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நெல்லியடி பொது நூலக
நலன்விரும்பிகள்.

[சி/9303]

# யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
# கலந்துரையாடலும் தேநீர் விருந்தும்

இடம்; சிரேஷ்ட பொது அறை, யாழ். பல்கலைக்கழகம்.
காலம்: 12-10-99 செவ்வாய்க்கிழமை, மு ப. 9 மணி

**பேராசிரியர் கோ. சந்திரசேகரன்**
அவர்களுடன் பல்கலைக்கழகத்தில் அறிமுகமாகும்
புதுவழிப் பாடத்திட்ட முறைமை
பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும்.
பல்கலைக்கழக ஆசிரியர்கள் அனைவரும்
தவறாது பங்குகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் (தலைவர்)
யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்,

(69880)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NIRU**
**Tuition Centre**
Station Road – Kondavil
**A/L 2001**
பௌதிகவியல்
சுழற்சி இயக்கவியல்
[பொறியியல்]
ஆரம்பம்:
**12-10-1999**
செவ்வாய் 4.45 P. M.
த. சம்பந்தன் B. Sc.
[69869]



எமது நேற்றைய புதிய
வீடியோ CD
வெளியீடுகள்
▶ கதாநாயகி
▶ லேடி டைகர்
பிரதிகளை உடன்
பெற்றுக்கொள்ளலாம்.
பிரமிட் CD யில்
▶ நேசம் புதுசு
அடுத்த வெளியீடு
▶ பாரதரத்னா
**I. T. N. வீடியோ**
27, கோயில் வீதி,
கொக்குவில்.
T. P. 3123 [69865]


## கிணற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஊர்காவற்றுறை பொலீஸார் வழங்கிய தகவலைத் தொடர்ந்து மேற்படி பகுதிக்குச் சென்று கிணற்றைப் பார்வையிட்ட நீதிவான் எலும்புகளை மீட்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த வியாழன், ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் எலும்புகளும் அவற்றின் எச்சங்களும் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டன.

இது தொடர்பாக மரண விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-5-15)

## காத்தான்குடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

ததை அவதானித்தவர்கள் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தனர். விசேட அதிரடிப் படையின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் உடனடியாக அங்கு விரைந்து வந்து குண்டை செயலிழக்கச் செய்யுமுன்னரே அது வெடித்தது.

இச் சம்பவத்தில் எவருக்கும் காயமேற்படவில்லை.

இடை வழியில் பஸ்ஸில் ஏறிய பயணி ஒருவரே இக் குண்டை வைத்திருக்கவேண்டும் எனப் பொலீஸார் நம்புகின்றனர். (ஐ-7-21)

## பாதிக்கப்பட்ட:

(முதலாம் பக்கத் தொடர்)

குறித்த சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கு அது பற்றிய வைத்திய அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு நஷ்டஈடு வழங்குமாறும்அரச அதிபருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு, மந்துவில் பகுதியில் இடம்பெற்ற கிபிர் குண்டுத் தாக்குதலில் 22 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்ததும் 50 பேர் வரையில் படுகாயமடைந்ததும் தெரிந்ததே. (ஐ-7-164)

## எல்லைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

மாளிகையில் இருந்தவாறு ஜனாதிபதி நேற்றுமுன்தினம் பதிலளித்தார்.

எல்லைக்கிராமங்களுக்கான புதிய பாதுகாப்புத் திட்டம் அந்தந்தப்பகுதிகளில் உள்ளூர் அரசியல் தலைவர்களினால் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கென உரிய அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் பாதுகாப்புக் குழுக்களும் அமைக்கப்படும். பாதுகாப்புத் தொடர்பாக இந்தக் குழுக்கள் உரிய துறையினருடன் தொடர்புகளைக் கொண்டிருக்கும். முறையான ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினாலேயே சில சம்பவங்கள் நடந்துள்ளன — என்று ஜனாதிபதி கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். (ஐ-7-6)

# பலாத்காரம் புரிந்தோரை அடையாளம் காட்ட முடியாது

## வரணி சம்பவம் குறித்து வாக்கு மூலம்

யாழ்ப்பாணம், ஒக். 12

'என்மீது பாலியல் வல்லுறவு புரிந்தவர்களை யார் என்று என்னால் தெளிவாகக் கூற முடியாதுள்ளது. என்னால் அவ்விடத்துக்கு வந்தவர்களைச் சரியாக அடையாளம் காட்ட முடியாது. என்மீது குற்றம் புரிந்தவர்களை சட்டத்தின் முன்பாக நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

இவ்வாறு வறணி வடக்கில் கடந்த 29 ஆம் திகதி இனந் தெரியாத நபர்களினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட இளம் விதவையான கிருஷ்ணராஜா ராஜேஸ்வரி யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி எஸ், சிறிதரனிடம் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்காக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி வரணிக்குச் சென்றிருந்தார்.

அப்பெண் தனது வாக்குமூலத்தில் மேலும் கூறியதாவது:-

சம்பவதினம் (29-09-99) இரவு 11 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது சகோதரன் மங்களேஸ்வரன் எனது அறைக்கதவைத் திறக்கும்படி சொன்னார். நான் அறைக்கதவைத் திறந்து லாம்புடன் வெளியே வந்தேன். அப்போது முற்றத்தில் இருவர் நின்றனர். அவர்கள் வீட்டு வேலிக்கு அருகில் எனது சகோதரனைக் கூட்டிக்கொண்டு சென்றனர்.

அவர்களில் ஒருவர் பச்சை நிற பெனியனும் காற்சட்டையும் அணிந்திருந்தார். சப்பாத்து அணிந்திருக்கவில்லை. அவரது தோளில் துப்பாக்கி போன்றதொரு பொருள் காணப்பட்டது. பயத்தினால் எவற்றையும் பார்க்க முடியவில்லை. அவர் தமிழில் கதைத்தார். என் பெயர் மற்றும் குடும்ப விவரங்களைக் கேட்டு விசாரித்தார்.

பின்னர் என்னைச் சத்தம் போட வேண்டாம், சத்தம் போட்டால் சுடுவோம் எனக் கூறி உனக்குச் சகோதரன் வேண்டுமா, வேண்டாமா? சகோதரனை இராணுவம் அழைத்துச் சென்று சுட்டுவிடும் என்றார். பின்னர் கொடியில் இருந்த துணியை எடுக்கும்படி சொல்லி பக்கத்திலிருந்த காணிக்கு அழைத்துச் சென்றார்.

அங்கே கொடியில் எடுத்த துணியை கீழே விரிக்கும்படி சொன்னார். நானும் அவர் சொன்னபடி செய்தேன். அதன் பின்பு என் மீது பலாத்காரம் புரிந்தார். அதன் பின்பு மற்றவர்கள் என்மீது பலாத்காரம் புரிந்தனர். அதன் பின்பு மூன்றாமவர் என்மீது பலாத்காரம் புரிய முயன்றபோது எனது மூத்த மகள் சர்மியா அழுதசத்தம் கேட்டது.

அப்போது நான் எனது பிள்ளை அழுகிறது. போகப் போகிறேன் என்றேன். அப்போது ஒருவர் பொறு பொறு என்று சொல்ல மற்றவர்கள் இருவரும் போகச் சொன்னார்கள். அவர்கள் தமிழில் தான் கதைத்தனர். நான் அவ்விடத்தை விட்டு ஓடி வந்துவிட்டேன். அறைக்குள் எனது உடுப்புகளைத் தேடினேன். உடுப்புகளையும்காணவில்லை குழந்தையையும் காணவில்லை.

பின்னர் எனது தந்தையுடன் பக்கத்து வீட்டிற்குச் சென்று எனது ஆடைகளை அணிந்தேன். எனது 3வயதுக் குழந்தை இருட்டில் நடந்து மாமி மாமி என்று அழுது கொண்டு சென்றதாக அறிந்தேன். இச்சம்பவத்திற்கு பின்பு வரணி கறுக்காய் இராணுவ முகாமுக்குஎனது தம்பியும் தந்தையும் சென்றபோது தற்சமயம் ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார்கள். அப்போது நேரம் இரவு 12 மணி.

30. 09. 99 அன்று காலை 9 மணிக்கு வரணி இராணுவ முகாமிற்கு நானும் தந்தையும் சகோதரனும் சென்று முறையிட்டோம். அவர்கள் கொடிகாமம் பொலீஸ் நிலையம் செல்லுமாறு கூறினார்கள். அவர்கள் எம்மைத் தமது வாகனத்தில் ஏற்றி கொடிகாமம் பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

அதன் பின் பொலீஸாரும் இராணுவத்தினரும் வீட்டிற்கு வந்து சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டனர். என்னைச் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு நான்கு நாள்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற்றேன்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-7-4)

## நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பலாலி வீதியும் பருத்தித்துறை வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைந்திருந்த கைவிடப்பட்ட காவலரண் ஒன்றின் மீதே கிரனேட் வீசப்பட்டதாகவும் —

அதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் —

யாழ். நகரப் படைவட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-உ)

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

பாய்ந்ததால் அப்பால் செல்லமுடியாது திரும்பியதாக வவுனியா செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை —

கடந்த ஒருவார காலமாகப் பெய்துவரும் மழைகாரணமாக இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இடம் பெயர்ந்து வசிக்கும் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

துணுக்காய்ப் பகுதியில் மழையால் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ஐ-7-164)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்)

ணமானார். அவருடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் அரச அதிகாரிகளும் உடன் சென்றுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகள் குறித்து மாலைதீவு அதிபருடன் சந்திரிகா பேச்சுநடத்தவுள்ளார். (ஐ-7)


# வேலையாள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள
ஆண் ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**மாருதி ரெக்ஸ்,**
இல. 01, பஜார் வீதி,
யாழ்ப்பாணம்.
(69884)



# ஷண் ஓடியோ கெசற்றுகள்

ஷண்ணின் சங்கீத சாம்ராஜ்யத்துள் பக்தர்கள் படையணி
நவராத்திரி வெளியீடு மலிவு விலையில்
அட்டகாசமான விற்பனை!

இன்று முதல் அழகிய வர்ணக் கவர்களுடன் மக்சல் T.D.K. கெசற்றுகளில் பதிவுசெய்யப்பட்ட பக்திப் பாடல்களையும் அதிரடி மலிவு விலையில் விற்பனை செய்கின்றோம்.

★ இச்சலுகை எதிர்வரும் வெள்ளிவரை. முக்தியைத் தந்திடும் பக்திப்பாடல்களைப் பெற முந்துங்கள்!
எல்லாப் புகழும் இறைவனுக்கே!
என்கடன் பணிசெய்து கிடப்பதே.

— மேஜர் ஷண்

24/2, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(69875)



இன்றைய வீடியோ
CD வெளியீடு!
※ பாரதரத்னா
※ No.1 போலீஸ்
(பிரமிட் CD)
சிரஞ்சீவி — ரம்பா
ரம்யாகிருஷ்ணன் நடித்த
※ சிங்கநடை
**ஆர்க்**
**வீடியோ லைபிறறி**
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9310)


# மரண அறிவித்தல்

## அப்பாத்துரை சதாசிவம் (கிளி)

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் தபால் திணைக்களம்)

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொழும்பில் வசித்தவருமான சதாசிவம் (கிளி) அவர்கள் 11-10-1999 இல் காலமாகிவிட்டார்.

இவர் அப்பாத்துரை — கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் கமலாம்பாளின் அன்புக் கணவரும் இராசையா — தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், பிரபாகரன், பிரபலதா, சிறிகரன், உமாகரன், பாஸ்கரன், கிருபாகரன், கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புஸ்பராணி, பாலேந்திரதாஸ், சாந்தினி, ரஜினி ஆகியோரின் மாமனாரும் தையல்நாயகி, சின்னத்துரை, குணவதி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, இரட்ணசிங்கம், குணநாயகி, சண்முகநாதன், வரதலட்சுமி, பத்மேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஆறுமுகம் தையல்நாயகி
(சகோதரி)

கொழும்பு:
T. P. : 739344.
இல: 93 கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(சி/9314)


# Immediate Vacancies

**"WALK IN"**

Interview, will be entertained from suitable candi dates, on 20th October 1999 for the undermentioned Posts:

Lecturers in Computer Science/ Information Technology (Permanent and Visiting Lecturers)

Educational and other Qualifications:

Graduate of a recognized University in computer field or Full member of a recognized Professional body.

The ideal candidates will receive an attractive salary and other fringed benefit.

Director,
IIS,
100 Clock Tower Road,
Jaffna.
(C/9293)


## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

தேடுதலின்போது சுமார் 600 க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் படையினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பின்னர் சந்தேகத்தின் பேரில் மேலதிக விசாரணைக்காக 15 இளைஞர்களைப் படையினர் முகாமுக்கு அழைத்துச் சென்றனர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பு நகரப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினர் ஊடுருவியுள்ளனர் எனக் கிடைத்த தகவலை அடுத்தே படையினர் சுமார் இரண்டுமணி நேரம் தேடுதலை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-21-150)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 12-10-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org